2003 ஏப்ரல் 28]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. செ. வெங்கடாஜலம்.

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிர் சிறு வணிகக் கடன் வழங்குவதிலே, நுகர்வோர் கடன் வழங்குவதில் வங்கிகளுக்குக் குறிப்பிட்ட அளவுதான் கடன் வழங்க வேண்டும் என்று அரசாணை உள்ளதா? அப்படி இருக்குமேயானால், நகர்ப்புறங்களில் இருக்கின்ற அந்த ஆணையைத் தளர்த்தி அதிக அளவிலே கடன் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே. வங்கிகளிலே கடன்களைப் பெறுகின்றபோது அவர்கள் என்ன மாதிரியான கடன்களைப் பெற இருக்கின்றார்கள் என்பதற்கேற்ப ரூ.1 இலட்சத்திலேயிருந்து 10 இலட்சம் வரைகூட கடன்களை வழங்க வங்கிகள் தயார் நிலையிலே இருக்கின்றன. அவர்கள் சொல்கிற அந்த விதிமுறைகளுக்கு ஏற்ப நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்கள் அணுகுவார்களேயானால் அந்தக் கடன்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 345, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்

345—

முழுநேர நியாய விலைக் கடை

***14826—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதியில் 500-க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ள ஊர்களில் இயங்கிவரும் பகுதிநேர நியாயவிலைக் கடையினை முழுநேர நியாயவிலைக் கடையாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2003 ஏப்ரல் 28

மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதியில் 23 பகுதிநேர நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. 23 பகுதிநேர நியாயவிலைக் கடைகளிலும் 500 குடும்ப அட்டைகளுக்கும் குறைவாக உள்ளது. 500 குடும்ப அட்டைகளுக்குமேல் உள்ள பகுதிநேர நியாயவிலைக் கடைகள் இந்தத் தொகுதியில் ஏதும் இல்லை. எனவே பகுதிநேர நியாயவிலைக் கடைகளை முழுநேர நியாயவிலைக் கடைகளாக மாற்றும் வாய்ப்பு தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ப. ஆண்டிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இக்கேள்வியை ஓராண்டு காலத்திற்கு முன்பு போட்ட நேரத்தில் 6 இடங்களில் இப்பிரச்சினை இருந்தது. கூட்டுறவு D.R. அவர்களும், J.R. அவர்களும் சரி செய்து இருக்கிறார்கள். இருப்பினும் எனது தொகுதி ஜேனங்கோட்டை என்ற ஊரில் நடத்தப்பட்டு வருகின்ற கூட்டுறவு அங்காடியில் 880 குடும்ப அட்டைகள் இருக்கின்ற காரணத்தாலும், அந்தப் பகுதி மலைப்பகுதியாகவும் ஆற்றுப் பகுதியாகவும் இருக்கிற காரணத்தால், அவர்களுக்கு ஒரு தனிக் கடை அமைத்துக் கொடுக்க புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு முன்வருமா என்பதை இந்த நேரத்தில் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். எனது வேடசந்தூர் தொகுதி, போகாநத்தம் என்கிற ஊரிலிருந்து மலைப்பட்டி என்ற ஊர் 6 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. 6 கி.மீ. தொலைவில் இருக்கிற ஊரில் 340 குடும்ப அட்டைகளும், தாய்க்கடையான போகாநத்தம் ஊரில் இருக்கிற கடையில் 680 குடும்ப அட்டைகளும் இருக்கிற காரணத்தினால், அந்த மலைப்பட்டிக்கு ஒரு பகுதிநேரக் கடை பிரித்துக் கொடுக்க புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்வதோடு, நகராட்சி, பேரூராட்சிகளில் ஆயிரம், இரண்டாயிரம் என்று கூடுதலான எண்ணிக்கையுள்ள குடும்ப அட்டைகள் கொண்ட ஒரே கடை இருக்கிறது. அதைப் பிரித்து, ஒரு குறிப்பிட்ட அளவு குடும்ப அட்டைகளுக்கு ஒரு கடையை வைத்துவிட்டு, மக்களுடைய வசதிக்காக கடைகளைக் கூடுதலாக்கிக் கொடுக்க, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு

2003 ஏப்ரல் 28]

நடவடிக்கை எடுக்குமா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் பகுதியில் 23 கடைகள் இருப்பதாக முன்பே நான் குறிப்பிட்டேன். அதேபோன்று இங்கே பல பகுதிகளிலே அதிகமான அட்டைகள் இருக்கின்றன என்றாலும், குறைவாக இருந்தாலும், அது மலைப்பகுதியாக இருக்கிறது, அந்த பகுதிகளுக்கு அந்தக் கடையைத் தரவேண்டுமென்று மலைவாழ் மக்களினுடைய சிறப்பை முன்னிட்டு உறுப்பினரவர்கள் கேட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மலைப்பகுதிகளுக்கு இந்த நியாயவிலைக் கடைகளை பகுதி நேர கடைகளாக ஆக்குவதற்கு தகுதிகள் உண்டு என்கின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே உறுப்பினரவர்களுடைய பரிந்துரை குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கருத்துரு பெறப்பட்டு நிச்சயமாக ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. ஆண்டிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைப்பட்டி மக்களுடைய ஆதங்கத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்ற அமைச்சருடைய விளக்கத்திற்கு அந்தப் பகுதி மக்கள் சார்பாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 346, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

346—

கால்நடை மருத்துவமனை

***10873—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திருவம்பலாபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?